IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 47/2019
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜகோபால் | Caste | : | |
| Father Name | : | நாராயணசாமி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of September, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி பழனி என்னுடைய உடன் பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.281/2A2 என்ற சொத்து எங்களுக்குதான் உரிமையானது என்று ஆவணத்தை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது 3 அயிட்டமாக உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. 1ம் அயிட்டம் சர்வே எண்.281/2A2, 2ம் அயிட்டம் சர்வே எண்.282/11B சொத்துக்களை வாதி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான் நானும் கிரையம் பெற்றுள்ளேன். அதன் அடிப்படையில் வாதிதான் மேற்கண்ட சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல எங்களுடைய அனுபவத்தில்தான் இருந்து வருகிறது.

3. தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் தங்களுடையதுதான் என்று கிரைய ஆவணம் காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 3 அயிட்ட சொத்தின் சர்வே எண். 315/5 எங்களுடையதுதான் என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்துள்ளோம்.

4. 3 அயிட்ட தாவா சொத்தின் உரிமையாளர் முனுசாமி என்பவர் ஆவார் என்று சொன்னால் முனுசாமிதான் எனக்கு கொடுத்தது. முனுசாமி மலேசியா செல்வதற்கு முன்பு 3 வது அயிட்ட தாவா சொத்தை வாய்மொழி மூலமாக வாதிக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் தாவா 3 வது அயிட்ட தாவா சொத்தை வாதி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

5. முனுசாமி மலேசியாவிலிருந்து இந்தியாவிற்கு திரும்ப வந்த பிறகு வாதிக்கு எழுத்து மூலமாக முறையாக எழுதி தருவதாக சம்பந்தம் தெரிவித்துள்ளார் அதன் அடிப்படையில் 3 வது அயிட்ட சொத்தில் எனக்கு உரிமையோ, பாத்தியமோ அல்லது சுவாதீனமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் சரியான பிரதிபரனுக்காக முனுசாமிடமிருந்து வாதி கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI